IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# தகவல் தொடர்பில் சங்கு

**பா. உமா மகேஸ்வரி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, தி அமெரிக்கன் கல்லூரி, மதுரை - 625002

**பேராசிரியர் உ. பாலசுப்பிரமணியன்**
தேர்வாணையர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி - 627012

**ஆய்வுச்சுருக்கம்**

சங்கு என்பது கடல் வாழ் உயிரினமாகக் கருதப்படினும் இசைக்கருவிகளில் ஒன்றாகவும் திகழ்கின்றது. கடலில் வாழும் சங்கினம் உயிரற்ற நிலையில் கடற்கரையில் ஒதுங்குகின்றன. அவற்றை சங்க கால மக்கள் காய வைத்து மருந்துப் பொருட்கள் செய்ய பயன்படுத்தியுள்ளனர். தொடக்கக் காலங்களில் போh; நேரங்களை அறிவித்தல், கடல் பயணத்திவ் இருந்து மீளும் பரதவர்களின் வருகையை அறிவித்தல் முதலிய சூழல்களில் அறிவிப்பான் ஒலியாகவும் சங்கொலி அமைந்துள்ளது. ஆன்மீக நோக்கில் இசைக்கருவியாகவும் உபயோகப்படுத்தியுள்ளனர். இறைவனுக்கு பூஜை செய்தல், திருவிழா நாட்கள், இறைவன் சிலையை திருவீதிவுலாவிற்கு எடுத்துச் செல்லுதல், அதிகாலையில் இறைவனின் துயில் களைவதற்காக திருப்பள்ளிஎழுச்சிப் பாடல் பாடுதல் திருமணம் முதலிய தருணங்களில் சங்கின் ஒலியும் புனிதமாகக் கருதப்பட்டு ஒலிக்கப்பட்டுள்ளன. யானைக்கு மதம் பிடித்தச் செய்தியை மக்களுக்கு அறிவிக்கும் வகையில் சங்கு அவசர உதவிக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஓர் உயிரினம் மருந்துபொருளாகவும் புனித இசைக்கருவியாகவும் தகவல் அறிவிக்கும் தொழில்நுட்பக் கூறாகவும் மாற்றப்பெற்று மக்களுக்குப் பயன்தரும் வகையில் அமைந்ததனை சங்க இலக்கியப் பாடல்கள் வழி எடுத்துரைப்பதே இவ் ஆய்வுக்கட்டுரையின் உள்ளடக்கமாக அமைகின்றது.

**குறிப்புச்சொற்கள் :** *சங்கு, சூழல், ஒலி, தகவல் தொடர்பு, கருவி*

**முன்னுரை**

கடல்வாழ் உயிரினங்களில் ஒன்றான சங்கு, உயிரற்ற சூழலில், இசைக்கருவியாக மாற்றம் பெற்று, பண்டைய மக்கள் வாழ்வியலில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. கோவில் வழிபாடு தொடங்கி போர்க்கள வெற்றி மற்றும் இறப்பு நிகழ்வு வரையிலான அனைத்து நிழ்வுகளிலும் சங்கொலி இன்றியமையாதப் பங்கைப் பெற்றுள்ளது. இத்தகு சங்கிலிருந்து வெளிவரும் ஒலியானது தகவல் தொடர்பை (Communication) மேம்படுத்தும் வண்ணம் மக்களால் பயன்படுத்தப்பெற்றுள்ளது.

*"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்*
*மங்காத தமிழென்று சங்கே முழங்கே"*

எனத் தமிழின் பெருமையை உலகெங்கும் பறைசாற்றுதற்கு சங்கினை முழங்கிடுமாறு பாரதிதாசன் குறிப்பிடுவதன் வழி மற்ற இசைக்கருவிகளினும் சங்கு எனும் கருவியின் பழமை மற்றும் ஆளுகைத்தன்மை வெளிப்படுவதைக் காணலாம். இத்தகு சங்கானது, தகவல் தொடர்பில் ஆற்றிய பங்கினை, சங்க இலக்கியம் வழி எடுத்துரைப்பதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

**சங்கு**

"சங்கஸ்பைரம் (Xancus pyrum) அல்லது டர்பினெல்லா பைரம் (Turbinella pyrum, Linnaeus) என்பது சங்கின் அறிவியற் பெயராகும். நத்தையைப் போன்று சங்கு ஒற்றைச் சிப்பியை ((Univalve) உடையது. மெல்லுடலித் (Molluscus) தொகுதியின் வயிற்றுக்காலி (Gastropod) வகுப்பைச் சார்ந்தது. இதன் மெல்லிய உடற்பகுதி திருகலான ஓட்டுக்குள் இருக்கும். இவ்வோடே சங்கு ஆகும்."[1]

சங்கு என்ற சொல் 'சங்கா' என்ற வடமொழிச் சொல்லில் இருந்து பிறந்தது என்பர். சங்க இலக்கியத்தில் சங்கு என்ற சொல் எவ்விடத்திலும் பதிவாகவில்லை. மாறாக அதன் பிற பெயர்களாகிய வலம்புரி, வளை, கோடு, பணிலம், நந்து, நாகு முதலிய பெயர்களில் இடம்பெற்றுள்ளது. வலம்புரிச் சங்கு மிகவும் பிரபலமாகப் போற்றப்பட்டுள்ளது.

**திருப்பள்ளியெழுச்சி**

இறைவனைத் துயில் எழுப்புவதாகவும் மனிதர்களில் ஆன்மீக விழிப்பின்றி உறங்கிக் கொண்டிருக்கும் ஆத்மாவைத் துயிலெழுப்பி இறைவனின் கருணையை உணரச் செய்வதாகவும் பாடப்படுவதே திருப்பள்ளியெழுச்சி பாடலாகும். பக்தி இலக்கிய காலத்தில் சைவத்திற்கு மாணிக்கவாசகரும் வைணவத்திற்குத் தொண்டரடிப் பொடியாழ்வாரும் இப்பள்ளியெழுச்சிப் பாடல்களை முதன்மையாகப் பாடியுள்ளனர். இதனை சமஸ்கிருதத்தில் ஷசுப்ரபாதம்' என வழங்குவர். இறைவனுக்குப் பாடப்படும் இப்பள்ளிnழுச்சி சங்க இலக்கிய காலத்தில் மன்னனுக்கு மட்டும் பாடப்பெற்றுள்ளது. மன்னனின் துயில் களையப் பாடப்பட்டதால் இதனை 'துயிலெடை நிலை' என்று வழங்கியுள்ளனர். குறையாதப் புகழையுடைய அரசன் துயில்கொள்ளும் பொழுது, அவரை எழுப்பும் வண்ணம், சூதர்கள் மன்னனின் புகழ்பாடி நிற்கும் நிலையினை,

*"தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்*
*சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்"* *(தொல்.பொருள்.புறம்.நூ.1037)*

என்ற நூற்பா வழி தொல்காப்பியம் சுட்டிக்காட்டியுள்ளது. மன்னனின் துயில் களைவதற்கும் அவனுக்காகக் காத்திருப்பவர்கள் குறித்து நினைவுப்படுத்துவதற்கும் இப்பாடல் பாடப்பெறும் எனப் பன்னிருபாட்டியல் புதிதாக இலக்கணம் வரையறுத்துள்ளது. அதாவது "துயிலும் மன்னனுக்கு முன்னே சென்று குளிர்ந்த பொழுதாகிய விடியற் காலையின் இயல்புகளைச் சொல்லியும், 'முன்பே திறையளந்தாரும் இது காறும் திறையளக்காதாரும் நின்னைப் புகழ்ந்து நின் மொழி கேட்டு நடக்க விரும்பி வந்துள்ளனர்' என்றும் 'ஆகவே நீ துயில் எழுக' என்று சொல்லியும் சூதர் என்பார் துயில் எழுப்புவதாகப் பாடும் இனமாகும்" எனப் பன்னிருபாட்டியல் குறிப்பிட்டுள்ளது. இதனை,

***"கண்படை மன்னவர் முன்னர்த் தண்பத***
***விடியல் எல்லை இயல்புறச் சொல்லித்***
***தந்த திறையரும் தாராத் திறையரும்***
***ஏத்தி நின்மொழி கேட்டினி தியங்க***
***வேண்டினர் இத்துயில் எழுகென விளம்பின்***
***அதுவே மன்னவர் துயிலெடை நிலையே"*** ***(பன்னிருபாட்டியல் நூ. 324)***

என்ற நூற்பா வழி அறியலாம்.

அதிகாலையில் பாடப்படும் இப்பாடலுடன் இசைக்கருவிகளும் முழக்கப்பட்டு மங்கல ஒலிகள் எழுப்புவது பழமையான மரபாக உள்ளது. குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவ மன்னனிடம், பாpசில் பெறச் சென்ற புலவர் எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார், "பொழுது விடிந்ததை மன்னருக்கு அறிவிக்கும் வண்ணம் முரசங்களும் சங்குகளும் முழங்கும் ஒலியைக் கேட்பாயாக! வேலைப்பாடு அமைந்த மாலையை மார்பில் அணிந்த மன்னவனே துயில் எழுக!" எனத் தெளிந்த கண்ணை உடைய தடாரிப் பறையை இசைத்து நெடிய முற்றத்தின் கண் நிற்பதனை,

***"………………………. பாடு எழுந்து***
***இரங்குரல் முரசமொடு வலம்புரி ஆர்ப்ப,***
***இரவுப்புறங் கண்ட காலைத் தோன்றி***
***எஃகு இருள் அகற்றும் ஏமப் பாசறை,***
***வைகறை அரவம் கேளியர்! பலகோள்***
***செய்தார் மார்ப! எழுமதி துயில்' என***
***தெண்கண் மாக்கினை தெளிர்ப்ப ஒற்றி,***
***நெடுங்கடைத் தோன்றி யேனே"*** ***(புறம். 397:4-11)***

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. காலையில் எழுப்பப்படும் ஒலிகளின் சத்தத்தைக் கேட்டும் துயில்கொள்ளும் மன்னவனுக்கு வைகறைப் பொழுதை அறிவிக்க முரசுடன் சங்கொலி எழுப்புவதும் திருப்பள்ளியெழுச்சி பாடுவதும் தடாரி பறை எனும் இசைக்கருவியை முழக்கி பாpசில் பெற முனையும் புலவனின் திறத்தை வெளிப்படுத்துகின்றது.

பரிசில் பெறும் இரவலர் தன்னிலையையும் தன் வருகையையும் மன்னருக்கு அறிவிக்க தடாரி பறையை முழக்கியுள்ளார். சேரமான் வஞ்சனிடம் பரிசில் பெற வந்த திருத்தாமனார், மதி போன்ற வடிவினதாகிய அரித்த ஓசையை உடைய தடாரிப் பறையை, தனது இரப்புரை புலப்படுமாறு அதன் நெடிய வார்கள் அரித்த குரல் எடுத்து இயம்ப இசைத்ததனை,

*"மதியத்து அன்ன என் அரிக்குரல் தடாரி*
*இரவுரை நெடுவார் அரிப்ப வட்டித்து*
*உள்ளி வருநர் கொள்கலம் நிறைப்போய்!"* *(புறம்.398:12-14)*

என்ற பாடல் அடிகள் சுட்டுகின்றன.

திருச்சீரலைவாயில் வீற்றிருக்கும் முருகப்பெருமானை வைகறைப் பொழுதில் துயில் எழுப்பும் வண்ணம் தேவதுந்துபி, கொம்பு, வெள;ளிய சங்குகள், இடியை ஒத்த முரசுகள் முதலிய இசைக்கருவிகள் இசைக்கப்பட்டதனை,

*"அந்தரப் பல்லியம் கறங்க, திண்காழ்*
*வயிர்எழுந்து இசைப்ப, வால்வளை ஞரல*
*உரம்தலைக் கொண்ட உரும் இடி முரசமொடு"* *(திருமு. 119-121)*

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன. தேவதுந்துபி என்பது தேவர்களுடைய இசைக்கருவியாகும். இக்கருவியை மீட்டி முருகனைத் தேவர்கள் வழிப்பட்டனர் என்பதை அறிய முடிகின்றது. இங்ஙனம் இறைவன் மற்றும் மன்னருக்குப் பாடப்படும் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களில் இசைக்கப்படும் கருவியொலிகளில் ஒன்றாகச் சங்கொலியும் இடம்பெறுவது தெளிவாகின்றது. மன்னனின் துயில் களையவும், பாpசில் பெறும் பொருட்டும் இறைவனிடம் அருள் பொருட்டும் புலவர்களால் இசைக் கலந்து திருப்பள்ளியெழுச்சிப் பாடப்பட்டுள்ளது புலனாகின்றது.

**பரதவர் வருகை**

கடற்பரப்பில் மனிதர்களைக் கொல்லும் வலிமைவாய்ந்த சுறாக்களை அடக்கும் திண்மைப் பெற்ற பரதவர்கள் அவற்றை விடுத்து ஆழ்கடலில் மூழ்கி சங்கினை எடுத்து வருவர். சுறா மீனினும் வலம்புரிச் சங்கிலிருந்து கிடைக்கும் முத்து விலைமதிப்புடையதாகும். ஆகையால் பரதவர்கள் சங்கெடுக்க கடலுக்குள் செல்வது மரபாகும். அவ்வாறு சென்று வருகையில் கிடைக்கும் சங்கினை முழக்கி, தம் குடும்பத்தாருக்கு தங்களது வருகையினை தொpவுசெய்வர். இதனை,

*"இலங்குஇரும் பரப்பின் எறிசுறா நீக்கி,*
*வலம்புரி மூழ்கிய வான்திமிற் பரதவற்*
*ஒலிதலைப் பணிலம் ஆர்ப்ப, கல்லென,*
*கலிகெழு கொற்கை எதிர்கொள"* *(அகம். 350:10-13)*

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன. சங்கொலி கேட்ட கொற்கை மக்கள் கடற்கரைக்குத் திரும்பிய தம் உறவுகளைக் காணச் செல்வதன் வழி பரதவர்களின் வருகை அறிவிப்பானாகச் சங்கொலி அமைந்துள்ளது தெளிவாகின்றது.

**மதம் பிடித்த யானை**

கடலில் செல்லும் பாய்மரக் கப்பல், காற்றால் சிதைவடைந்து அசைவது போல, மதம் கொண்ட யானை முன்னும் பின்னும் அசைந்து, சினத்தால் பாறக்கோல்காரரைக் கொன்றும் தம்மேலுள்ள பாகரை வீசியும் எறியும். தன் காலில் போடப்பட்ட சங்கிலியினை அறுத்து எறிந்து, தறியை முறித்துக் கொண்டு செல்வதனை,

*"நெடுஞ்சுழிப் பட்ட நாவாய் போல,*
*இருதலைப் பணிலம் ஆர்ப்ப, சினம் சிறந்து*
*கோலோர்க் கொன்று மேலோர் வீசி*
*மென்பிணி வன்தொடர் பேணாது, காழ் சாய்த்து*
*கந்து நீத்து உழிதரும் கடாஅ யானையும்" (மது. 379-383)*

என்ற பாடல் அடிகள் சுட்டுகின்றன. இங்ஙனம் யானையின் இயல்பு மாறும் பொழுதும் அவை பின்புறம் திரும்பும் பொழுதும் அதன் முன்னும் பின்னும் சங்கொலி ஒலிக்கப்படும். யானைக்கு மதம் பிடித்தச் செய்தியை மக்கள் அனைவருக்கும் அறிவிக்கச் சங்கு எனும் இசைக்கருவி கையாளப்பெற்றுள்ளது தெளிவாகின்றது.

**திருமணம்**

தற்கால திருமண நிகழ்வில் நாகசுரம், கொட்டு முதலிய மங்கல வாத்தியக் கருவிகள் இசைக்கப்படுதல் போல பழங்காலத்தில் பறையுடன் சங்கு முழக்கப்பட்டுள்ளது. பலர் கூடுதற்கு ஏற்ப நிழலுடைய ஆலமரத்தினருகில், பொதுமக்கள் கூடும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும் பொது மன்றத்தில் சான்றோர் முன்னிலையில் தலைவன் மற்றும் தலைவிக்கு திருமணம் நிகழும். அத்தருணத்தில் சங்கொலி மங்கல ஒலியாக முழக்கப்படுவதனை,

*"பறைபட பணிலம் ஆர்ப்ப, இறை கொள்பு*
*தொல் மூதாலத்துப் பொதியில் தோன்றிய*
*நால் ஊர்க் கோசர் நல்மொழி போல,*
*வாய் ஆகின்றே - தோழி! ஆய் கழல்*
*சேயிலை வெள;வேல் விடலையொடு*
*தொகுவளை முன்கை மடந்தை நட்பே" (குறு. 15)*

என்ற பாடல் அடிகள் வழி அறியலாம்.

**போர்க்களம்**

போர்க்களத்தில் பகைவருடன் போரிட்டு வெற்றி பெற்ற தலைவன், மகிழ்ச்சியுடனும் ஆரவாரத்துடனும் இசை முழக்கங்களை முழக்கிக் கொண்டு, தம் இல்லம் திரும்புவது மரபாகும். முல்லைப்பாட்டில் பகைவரை வெல்லும் தலைவன் பகைநாட்டு நிலங்களைக் கவர்ந்து, திரண்ட பொறய படையோடு வெற்றிக்கொடியை உயர்த்தி, ஊதுகொம்பு, சங்கு முதலிய இசைக்கருவிகள் முழங்க, தம்மிடம் நோக்கி திரும்புவதனைப் புலவர் நப்பூதனார் பதிவுசெய்துள்ளார். இதனை,

*“……………………..வென்று, பிறர்*
*வேண்டுபுலம் கவர்ந்த, ஈண்டுபெருந் தானையொடு*
*விசயம், வெல்கொடி உயிரி, வலன்ஏர்பு,*
*வயிரும் வளையும் ஆர்ப்ப” (முல்லைப்பாட்டு 89-92)*

என்ற பாடல் அடிகள் வழி அறியலாம். போர்க்கள வெற்றியை உலகிற்கு அறிவிக்கச் சங்கொலி முழக்கப்பட்டுள்ளது புலனாகின்றது.

மற்றொரு பாடலில் அரண்மனையில் இன்பத்துயில் கொள்ளும் மன்னனின் கண்கள் பாசறையில் துயில் கொள்ளாதிருப்பதனை,

*“கொல் படை தொpய, வெல் கொடி நுடங்க*
*வயங்கு கதிர் வயிரொடு வலம்புரி ஆர்ப்ப” (பதிற்றுப்பத்து 67:5-6)*

என்ற பாடல் அடிகள் சுட்டுகின்றது. பாசறையில் போர் தொடங்கப்பெறுவதை அறிவிக்கும் வகையில் வைகறைப் பொழுதில் சங்கும் பிற வாத்தியங்களும் இசைக்கப்படும். ஆகையால் படையை வெற்றி நோக்கி நகர்த்திச் செல்லும் பொறுப்புடைய மன்னன் தூக்கமின்றி, அவ்வொலி கேட்டவுடன் எழுவதனை அறிய முடிகின்றது.

**முடிவுரை**

சங்கு எனும் இசைக்கருவி தற்காலத்தில் இறப்பு வீடுகளில் மிகுதியாகப் பயன்படுத்தப்பெறுவதால், அதனை அபசகுன ஒலியாகவும் கருவியாகவும் கருதுவர். சிவாலயம் மற்றும் இதர கோவில் பூஜைகளில் இன்றளவும் இச்சங்கொலி முழக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். சங்க இலக்கிய காலங்களில் போர்க்கள தொடக்கம் மற்றும் இறுதி முடிவை அறிவிக்கவும், திருப்பள்ளியெழுச்சி மற்றும் திருமண நிகழ்வில் மங்கல ஒலியாகவும் நெய்தல் நில பரதவர் வருகையை அறிவிக்கவும் யானைக்கு மதம் பிடித்தச் செய்தியை மக்களுக்கு அறிவித்து எச்சாpக்கவும் சங்கானது தகவல் தொடர்புக் கருவியாக முழக்கப்பட்டுள்ளதை ஆய்ந்தறிய முடிகின்றது.

**சான்றாதாரங்கள்**

1. சங்கு, அதியமான், ப.5
2. தொல்காப்பியம் தெளிவுரை, ச.வே. சுப்பிரமணியன் உரை
3. பன்னிருபாட்டியல்
4. பன்னிருபாட்டியல் வினா விடை, மோகன் (உரையாசிரியர்)
5. பத்துப்பாட்டு (1, 2), NCPH உரை
6. அகநானூறு, NCPH உரை
7. புறநானூறு, NCPH உரை
8. பதிற்றுப்பத்து, NCPH உரை